**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 67/2018

நாள் 04.11.2023.

பெயர். இளமாறன் த/பெ. யேசுதாஸ்

பி.வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

1. 6ம் பிரதிவாதி தற்போது உயிருடன் இல்லை. வழக்குரையில் சொல்லியுள்ள அ மற்றும் ஆ சொத்துக்கள் சேர்த்து தான் சி அட்டவணை வழக்கு சொத்துக்கள் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் தரப்பினார்கள் கொடுத்த குறிப்பாணையின் அடிப்படையில் வழக்கு அ மற்றும் ஆ அட்டவணை சொத்துக்களை ஐக்குபந்திகளுடன் சேர்த்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கறிஞர் ஆணையர் தவறாக அளந்து உள்ளார். வழக்கு அ மற்றும் ஆ அட்டவணை சொத்துக்கள் சர்வே எண்.367/1சி ல் ஐக்குபந்தியுடன் அடங்கிய சொத்துக்கள் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் சர்வே எண்367/1சி போர்வெல்லை குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார்.

2. மேற்படி போர்வெல்லில் வாதியின் விளை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவாதாக வழக்கறிஞர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி போர்வெல்க்கு மின் இணைப்பு வாதிக்கு சொந்தமான சர்வே எண்.339/8ஏ மற்றும் சர்வே எண்.339/1ஈ எண்ணில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் பாய்ச்சுவாதகா வழக்கிஞர் ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் வாதி தவறான சர்வே எண்ணிக்கு மின் இணைப்பு பெற்று தண்ணீர் பாய்ச்சு வந்தார் அது சம்மந்தமாக வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதை வாதியே திருப்ப பெற்றுக்கொண்டார்.

3. மேற்படி மின்சார துறையின் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் என்னையும் தரப்பினராக சேர்த்து இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மின்சார துறையின் மீது போட்ட வழக்கானது நான் மின்சார துறையும் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி சர்வேஎண்.367/1சி ல் கொடுக்கப்பட்ட போர்வெல்லில் உள்ள மின் இணைப்பை துண்டிக்க முயற்ச்சி செய்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மின்சார துறையின் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நானும் 6ம் பிரதிவாதியும் வாக்கலத்து தாக்கல் செய்து ஆஜர் ஆகினோம் என்றால் சரிதான்.

4. அசல் வழக்கு எண்.74/2018ல் நான் பதில் அறிவிப்பு எதுவும்

போடவில்லை என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். அசல் வழக்கு எண்.74/2018ல் நானும் 6ம் பிரதிவாதியும் தோன்ற தரப்பினராக உத்திரவிடப்பட்டுள்ளது என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். அசல் வழக்கு எண்.74/2018ல் மின்சார துறை மின் இணைப்பு துண்டிக்கபோவதில்லை என்று பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல வாதி சர்வே எண்.367/1ஈ மின் இணைப்பு பெற்றுள்ளார் ஆனால் சர்வே எண்.339/8ஏ வில் தான் கிணறும் மின் இணைப்பு தவறாக வைத்துள்ளதாகவும் அதை துண்டிக்க முழு அதிகாரம் உள்ளதாகவும் பதிலுரை தாக்கல் செய்துள்ளார். வாதி சர்வே எண்.367/1ஈ யில் எந்தவிதமான மின் இணைப்பு பெறவில்லை என்றால் சரியல்ல.

5. சர்வே எண்.367/1ஈ யில் மின் இணைப்பு பெற்று சர்வே எண் 339/8ஏ வில் தவறுதாலக ஒட்டிக் கொண்டுயிருப்பதாக பதிலுரையில் மின்சார துறை சொல்லியுள்ளதா என்றால் அதுபோல் எதுவும் சொல்லவில்லை. எனக்கு மின்சார துறையில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்பதற்காக தான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. 6ம் பிரதிவாதியை எனக்கு எவ்வுளவு நாளாக தெரியும் என்றால் நிலம் வாங்கும் போது தான் தெரியும். நான் 2018ம் வருடம் கிரையம் வாங்கிய பிறகு சர்வே எண்.367/1ஏ, 367/1பி ஆகிய நிலங்களை புல்டேசர் வைத்து சமன் செய்தேனா என்றால் செய்தேன். சர்வே எண்.367/1சி ஆனது சர்வே எண்.367/1பி யை விட 3 அடி கிழக்கு புறம் பள்ளத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் நிலங்களை சமன் செய்யும் போத வாதியின் இடமான சர்வே எண்.367/1சி யில் 3 அடியை ஆக்கிரமிப்பு செய்துக்கொண்டேன் என்றால் சர்வே எண்.367/1 சி ஆனாது வாதியின் நிலம் இல்லை அது என்னுடைய நிலம் ஆகும் அது 3 அடி பள்ளத்தில் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் நான் மேற்படி 3 அடியை ஆக்கிரமிப்பு செய்துயிருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் வழக்கிறஞர் ஆணையர் தவறாக அளந்து உள்ளார்.

7. அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில் புதியாக மூன்றிலிருந்து ஆறு மாதம் வயதுள்ள தென்னகன்று நடப்பட்டுள்ளதாக வழக்கறிஞர் ஆணையார் குறிப்பிட்டுள்ளார் என்றால் சர்வே எண்.367/1பி ல் தான் நடப்பட்டுள்ளது. சர்வே எண்.367/1சி 6ம் பிரதிவாதிக்கோ அல்லது அவர்கள் விற்ற நபர்களோ உரிமையில்லதால் வா.சா.ஆ5 முன்னிலைக்கு பட்டா மாற்றவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.367/1சி யை ஏற்கனவே வாதிக்கு விற்று விட்டதாலும் வா.சா.ஆ4 மற்றும் 5 ஆவணங்கள் போலியானது என்பதால் தான் சர்வே எண்.367/1சி க்கு மட்டும் எனக்கு பட்டா வழங்கவில்லை என்றால் சரியல்ல.

8. சர்வே எண்.367/1சி யை சுவாதீனமே இல்லாமல் கிரையம் எழுதிக்கொண்டது செல்லாது என்றால் சரியல்ல. என்னிடம் மற்றும் 6ம்

பிரதிவாதியிடம் சர்வே எண். 367/1சி யில் சுவாதீனம் இல்லதால் தான் பட்டா மாற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சர்வே எண்.367/1சி யில் உரிமையில்லாமல் பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டு வாதியிடம் பிரச்சனை செய்யவேண்டும் என்பதற்காவும் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுமென்றல் சரியல்ல. சர்வே எண்.367/1ஏ உரிமை, அனுபவம் மற்றும் பட்டா 6ம் பிரதிவாதியின் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான்.

(மறுவிசாரணையில்லை)

// ஒப்// பி.டி. சதீஷ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.